செய்தி வெளியீடு எண்: 521 நாள்: 19.07.2020

## செய்தி வெளியீடு

**கொரோனா தொற்றிலிருந்து மாணாக்கர்களை பாதுகாக்க, B.E./B.Tech. இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை, B.E./B.Tech. (Part Time) பகுதி நேர சேர்க்கை மற்றும் MBA / MCA முதுநிலை சேர்க்கை இணையதளம் வாயிலாகவே நடைபெறும்.**

அனைவருக்கும் வணக்கம் !

இந்த ஆண்டு தமிழ்நாடு பொறியியல் மாணாக்கர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பப்பதிவு கடந்த 15–7–2020 அன்று மாலை முதல் துவங்கப்பட்டுள்ளது. இதுவரை 55,995 மாணாக்கர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பப்பதிவு செய்துள்ளனர். இதில், 36,962 மாணாக்கர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்தியுள்ளனர். இணையதள விண்ணப்பப்பதிவு வருகிற 16–8–2020 வரை நடைபெறும். 16–7–2020 முதல் 18–7–2020 வரை, 2,290 மாணாக்கர்களுக்கு தொலைபேசி மூலமும், மின்னஞ்சல் மூலம் அவர்களது சந்தேகங்களுக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

இணையதள பதிவு முடிவு பெற்றவுடன், சமவாய்ப்பு (Random) எண் வெளியிடப்படும். அதனைத் தொடர்ந்து சான்றிதழ் சரிபார்ப்பும் இணையதள வழியாக நடைபெறும். மாணாக்கர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சமவாய்ப்பு எண். அவர்களது கைப்பேசிக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்பு, தரவரிசை பட்டியல் TNEA இணையதளத்தில் வெளியிடுவதுடன் சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரரின் கைப்பேசி எண்ணுக்கும் தகவல் அனுப்பப்படும்.

கொரோனா தொற்றிலிருந்து மாணாக்கர்களை பாதுகாக்க, தமிழ்நாடு பொறியியில் மாணாக்கர்கள் சேர்க்கைக்கான கலந்தாய்வும் வீட்டிலிருந்தபடியே இணையதளம் மூலம் நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதே போல,

B.E./B.Tech._இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை, பகுதி நேர B.E./B.Tech., MBA / MCA முதுநிலை படிப்புகளுக்கான கலந்தாய்வும் இணையதள வாயிலாகவே நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :

**<u>பகுதி நேர B.E./B.Tech.</u>**

**2015–16**–ம் கல்வியாண்டு முதல் **2019–20** வரை பகுதி நேர B.E./B.Tech. பொறியியல் படிப்புகளுக்கான சேர்க்கைக்கு இணையதள வாயிலாக விண்ணப்பங்கள் பதிவு செய்து, கோயம்புத்தூரில் உள்ள கோயம்புத்தூர் தொழில்நுட்பக் கல்லூரியில் மாணாக்கர்கள் நேரில் வரவழைத்து கலந்தாய்வு நடைபெற்றது. தற்பொழுது கொரோனா தொற்றிலிருந்து மாணாக்கர்களை பாதுகாக்க, இந்த ஆண்டு முதல் பகுதி நேர B.E./B.Tech. பொறியியல் படிப்புகள் சேர்க்கைக்கான கலந்தாய்வும் வீட்டிலிருந்தபடியே இணையதளம் மூலம் நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கான அறிவிக்கையும், விண்ணப்பப்பதிவு செய்யவிருக்கும் இணையதள முகவரியும் பின்னர் வெளியிடப்படும்.

**<u>B.E./B.Tech. இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை</u>**

**2016–17**–ம் கல்வியாண்டு முதல் **2019–20** வரை இரண்டாமாண்டு_B.E./B.Tech. பொறியியல் படிப்புகளுக்கான சேர்க்கைக்கு இணையதள வாயிலாக விண்ணப்பங்கள் பதிவு செய்து, காரைக்குடி அழகப்பா அரசு பொறியியல் கல்லூரியில் மாணாக்கர்கள் நேரில் வரவழைத்து கலந்தாய்வு நடைபெற்றது. தற்பொழுது கொரோனா தொற்றிலிருந்து மாணாக்கர்களை பாதுகாக்க, இந்த ஆண்டு முதல் இரண்டாமாண்டு B.E./B.Tech. பொறியியல் படிப்புகள் சேர்க்கைக்கான கலந்தாய்வும் வீட்டிலிருந்தபடியே இணையதளம் மூலம் நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கான அறிவிக்கையும், விண்ணப்பப்பதிவு செய்யவிருக்கும் இணையதள முகவரியும் பின்னர் வெளியிடப்படும்.

**MBA / MCA முதுநிலை படிப்புகள்**

2016–17–ம் கல்வியாண்டு முதல் 2019–20 வரை MBA / MCA முதுநிலை படிப்புகளுக்கான சேர்க்கைக்கு இணையதள வாயிலாக விண்ணப்பங்கள் பதிவு செய்து, கோயம்புத்தூர் அரசு பொறியியல் கல்லூரியில் நேரில் வரவழைத்து கலந்தாய்வு நடைபெற்றது. தற்பொழுது கொரோனா தொற்றிலிருந்து மாணாக்கர்களை பாதுகாக்க, இந்த ஆண்டு முதல் MBA / MCA முதுநிலை படிப்புகள் சேர்க்கைக்கான கலந்தாய்வும் வீட்டிலிருந்தபடியே இணையதளம் மூலம் நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கான அறிவிக்கையும், விண்ணப்பப்பதிவு செய்யவிருக்கும் இணையதள முகவரியும் பின்னர் வெளியிடப்படும்.

******

**உயர்கல்வித் துறை அமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**